செ.வெ.எண்:378/2009(செமதொஅ) நாள். 05.11.2009

**மாணவர்கள் கல்வியில் சிறந்த விளங்க வேண்டும் என்பதற்காக இந்த ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ரூ.9 ஆயிரம் கோடி நிதிஒதுக்கீடு வழங்கி உள்ளார் - மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள் பேச்சு.**

காஞ்சிபுரம் மாவட்டம், மதுராந்தகம் எச்.சௌபாக்மல் சௌகார் அரசினர் மகளிர் மேல்நிலைப் பள்ளியில் இலவச மிதிவண்டி வழங்கும் விழா, பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.10 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்படும் புதிய கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டுவிழா மற்றும் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.5 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள விழாமேடை திறப்பு விழா ஆகியவை நடைபெற்றது. விழாவில் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள் கலந்து கொண்டு 556 மாணவிகளுக்கு இலவச மிதிவண்டிகளை வழங்கி, புதிய கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டி, விழா மேடையினை திறந்து வைத்து விழாப் பேருரையாற்றியதாவது,

கடந்த ஆண்டு இந்த பள்ளியில் நடைபெற்ற விழாவில் கலந்து கொண்டு பல்வேறு கலைநிகழ்ச்சிகளை கண்டுகளித்தேன். அப்போது பேசும்போது பள்ளியின் தேர்ச்சி விகிதம் மிகவும் குறைவாக இருந்தது. 100 சதவீதம் தேர்ச்சிப் பெற வேண்டும் என கூறினேன். நீங்கள் எல்லாம் சரி என்று கூறினீர்கள். ஆனால், சென்ற ஆண்டும் குறைவாக உள்ளது. எனவே, நீங்கள் சிறப்பாக கல்வி பயின்று 100 சதவீதம் தேர்ச்சிப் பெற முயலவேண்டும். இந்தியாவிலேயே தமிழகம் கல்வியில் சிறந்து விளங்க வேண்டும் என்பதற்காக எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் கல்விக்காக இந்த ஆண்டு ரூ.9 ஆயிரம் கோடி நிதி ஒதுக்கீட்டினை மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் வழங்கியுள்ளார்.

கடந்த 3¼ ஆண்டுகளில் தொகுப்பு ஊதியம் பெற்ற 42 ஆயிரத்து 924 ஆசிரியர்களுக்கு தற்போது காலமுறை ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது. புதியதாக 44 ஆயிரத்து 3 ஆசிரியர்கள் நியமிக்கப் பட்டுள்ளார்கள். இந்த ஆண்டு 12 ஆயிரத்து 800 ஆசிரிய பணியிடங்கள் புதியதாக நிரப்பட உள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏழை-எளிய மாணவச் செல்வங்கள் சிறப்பாக கல்வி பயில அனைவருக்கும் கல்வித் திட்டத்தின் கீழ் ரூ.860 கோடியில் 31 ஆயிரத்து 897 வகுப்பறைகள் கட்டித் தந்துள்ளார்.

நபார்டு திட்டத்தின் கீழ் ரூ.770 கோடியில் 849 பள்ளிகளில் புதிய கட்டடங்கள், நவீன கழிப்பறைகள், குடிநீர், அறிவியல் ஆய்வுக் கூடம் போன்ற அனைத்து வசதிகளையும் ஏற்படுத்தி தந்துள்ளார். பள்ளி மாணவ-மாணவிகளுக்கு இலவச மிதிவண்டிகள், இலவச பேருந்த பயண அட்டை, கல்விக் கட்டணம் ரத்து, தேர்வு எழுதும்போது வினாத்தாளை படிக்க 15 நிமிடம் அதிகம் கொடுத்துள்ளார். அடுத்த ஆண்டிலிருந்து 1 முதல் 6ம் வகுப்பு வரை சமச்சீர் கல்விமுறை செயல்படுத்தப்பட உள்ளது. இந்தியாவிலேயே தமிழகத்தில் தான் கல்வித்துறைக்கு என்று இரண்டு அமைச்சர்கள் நியமிக்கபட்டுள்ளார்கள்.

இந்த அரசு பொறுப்பெற்ற பிறகு தேர்ச்சி விகிதம் அதிகமாக உள்ளது. அதற்கு தேவையான எல்லா உதவிகளையும் இந்த அரசு வழங்கி வருகிறது. தனியார் பள்ளிகளுக்கு நிகராக அரசு பள்ளிகளும் சிறப்பாக செயல்பட வேண்டும் என்பதற்காக புதிய கட்டடங்கள், அறிவியல் கூடம் போன்ற அனைத்து அடிப்படை வசதிகளையும் வழங்கி உள்ளது. நீங்கள் நன்றாக படித்து நாட்டின் தூண்களாக விளங்க வேண்டும். அடுத்தமுறை இப்பள்ளிக்கு வரும்போது இந்த பள்ளி 100 சதவீதம் தேர்ச்சிப் பெற்ற பள்ளியாக இருக்க வேண்டும் என கூறினார்.

விழாவில், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மற்றும் பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர் திரு.எஸ்.டி.உகம்சந்த் தலைமை தாங்கி பேசினார். மதுராந்தக சட்டமன்ற உறுப்பினர் திருமதி.கே.காயத்ரி தேவி, முதன்மைக் கல்வி அலுவலர் திரு.த.மோகனகுமார், மாவட்ட கல்வி அலுவலர் திரு.பி.முருகன், மதுராந்தகம் ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர் செல்வி.எஸ்.சசிரேகா ஸ்ரீதரன், நகரமன்றத் தலைவர் திருமதி.கே.மலர்விழி குமார், பெற்றோர் ஆசிரியர் கழக பொருளாளர் திரு.வே.அமுல்ராஜ் ஆகியோர் பேசினார்கள். முன்னதாக அரசு மகளிர் பள்ளி தலைமை ஆசிரியர் திரு.கு.சுந்தரமூர்த்தி அனைவரையும் வரவேற்றுப் பேசினார். முடிவில் உதவி தலைமை ஆசிரியர் திருமதி.பவுன்பாப்பா நன்றி கூறினார். விழாவில் வருவாய் கோட்ட அலுவலர் திரு.விஜயகுமார், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், பெற்றோர் ஆசிரிய கழக துணைத்தலைவர் திரு.எஸ்.டி.அசோக்குமார், நகர மன்றத் துணைத்தலைவர் திரு.எஸ்.டி.பிரேம்சந்த், பெற்றோர் ஆசிரியர் கழக செயற்குழு உறுப்பினர்கள், கல்விக்குழு உறுப்பினர்கள் மற்றும் மாணவிகளின் பெற்றோர்கள், ஆசிரியப் பெருமக்கள், மாணவிகள் மற்றும் அரசுத்துறை அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

செய்தி வெளியிடுபவர்,

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
காஞ்சிபுரம்